LIBRARY
20 JUL 1965
STATE LEGISLATURE, MADRAS

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Saturday, 20th March 1965.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### இம்மாநிலத்திற்கு தக்க வீதத்தில் ஐ.ஏ.எஸ். பிரதிநிதித்துவம்

* 283 கேள்வி.—**திரு. செ. மாதவன் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஐ.ஏ.எஸ். தேர்வுகளில் சென்னை மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தக்க விகிதாச்சாரப்படி தேர்வு பெறுவதற்கு நம் அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகள் எடுத்து ஆவன செய்யும் உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தமிழ்நாடு பல்கலைக் கழகங்களின் கல்வித் தரம் யாவரும் அறிந்ததே. அப்படியிருக்க, ஐ.ஏ.எஸ். தேர்வுகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் நன்ருக எழுதவில்லை யென்று நினைப்பதற்கு நியாயமில்லை.

The academic standards maintained by the Madras Universities are well known and there is no reason to presume that Madras candidates do not fare well in the I.A.S. Examinations.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** அப்படியென்ருல் தமிழ் நாட்டைச் சார்ந்த பல மாணவர்கள் நல்ல முறையில் பரீட்சை எழுதியிருந்தும் என்ன காரணத்திஞல் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பதை அரசாங்கம் சொல்ல முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவர்கள் என்ன விடை அளித்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. அதைப் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் இருந்தால் நான் விவரங்கள் கூறலாம்.

**திரு. து. ப. அழகமுத்து :** தமிழ் நாட்டு மாணவர்கள் என்ன விகிதாசாரத்தில் வெற்றி பெற்றிருக்கிருர்கள் என்ருவது சொல்ல முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அது பற்றி தனியாக கேள்வி கேட்டால் கூறலாம்.

**திரு. வை. சங்கரன் :** கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் விகிதாசாரம் மிகவும் குறைந்திருப்பது உண்மையா ? அப்படியாஞல் அதன் அடிப்படைக் காரணம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அந்த விவரம் என்னிடம் இல்லை.

SRI V. KRISHNAMOORTHY : Is it a fact that the answer papers of students appearing for I.A.S. Examination from Madras area are corrected by Northern Universities and they are showing some discrimination in the matter of giving marks to those students?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not think that that is correct.

[20th March 1965

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, ஐ.எ.எஸ். தேர்வுகள் எடுக்கும் போது இந்தியா முழுவதும் சேர்த்து பொதுப்படையாக எடுக்கப்படுகிறதா ? அல்லது மாநில வாரியாகப் பங்கு கொடுத்து எடுக்கப்படுகிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மாநில வாரியாகப் பங்கு கொடுப்ப தில்லை. மொத்தத்தில் எடுத்து தரத்திற்குத் தகுந்தபடிதான் தேர்ந்தெடுக் கப்படுகிறார்கள். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் தமிழ்நாட்டு ஜனத் தொகை விகிதாச்சாரத்திற்கு அதிகமாகவே, இரட்டிப்பு என்று கூடச் சொல்லலாம். இப்போது தேர்ந் தெடுக்கப்பட்டு வருகிறார்கள்.

**திரு. எ. கா. பாலகிருஷ்ணன் :** விகிதாச்சாரம் பற்றி எங்கள் தலைவர் அவர்களே கேட்டு விட்டார்கள். ஐ. எ. எஸ். தேர்வுக்குப் போகிற வர்களில் ஹரிஜனங்கள் அதிகமாகப் பாதிக்கப்படுவதாகச் சொல்லுகிறார் களே, அது உண்மையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

**திரு. ஜே. மாதா கவுடர் :** சென்ற ஆண்டு எவ்வளவு பேர்கள் ஐ.எ.எஸ். பரீட்சை எழுதினார்கள் ? அதில் தமிழ்நாட்டில் உள்ளவர் எவ்வளவு பேர்கள் தேறியிருக்கிறார்கள் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அது பற்றி என்னிடம் தகவல் இல்லை. தனிக் கேள்வி கேட்டால் விவரம் சொல்லலாம்.

SRI S. NANJUNDA ROW : Are regional languages going to be permitted for writing the I.A.S. Examination?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is rather too soon to offer any opinion about it.

**திரு. அ. ராமச்சந்திர ராயர் :** பாக்வெட் க்ளாஸஸ்க்குக் கோட்டா ஸிஸ் டம் அமுல்படுத்த முடியுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்போது ஒன்றும் முடிவு ஏற்பட வில்லை. ஆகவே நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.

**திரு. வை. சங்கரன் :** ஐ.எ.எஸ். பேப்பர்கள் திருத்தப்படும் முறை ஆரம்பத்தில் இருந்த முறைதான், இப்போது இருந்து வருகிறது என்பதால் இப்போது நார்த்தேர்ன் யூனிவர்ஸிட்டீஸில் உள்ளவர்கள் திருத்துவதால் குறைந்து விட்டது என்ற காரணம் சரி அல்ல என்பதை உணருவார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** முன்பே தெரிவித்திருக்கிறேன்.

**திரு. அ. ராகவ ரெட்டி :** ஐ.எ.எஸ். ஆபீசர்கள் போட வேண்டிய திருவள்ளூர் போன்ற டிவிஷன்களில் வேண்டிய ஐ.எ.எஸ் ஆபீசர் களைப் போடாமல் ஐ.எ.எஸ். அல்லாத டெப்டி கலக்டெர்களைப் போடுகி றார்கள். அதை அரசாங்கம் பரிசீலனை செய்வார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஒவ்வொரு மாகாணத்திற்கும் எவ் வளவு ஐ.எ.எஸ். என்று நிர்ணயிக்கப்பட்டு அந்த அளவு ஐ. எ. எஸ். அனுப்பப்படுகிறார்கள். இருந்தாலும் ஐ.எ.எஸ். காரர்களை வேறு சில அலுவல்களுக்குப் போடுகிறோம். ஆகவே சில ஐ.எ.எஸ். டிவிஷன் களில் ஐ.எ.எஸ். ஐ.ஆர்.டி.ஓ. ஆகப் போட முடியாமல் இருக்கிறது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** தமிழ் மொழியை இந்த ஐ. எ. எஸ். பரீட்சைக்கு ஒரு மொழியாக ஆக்கிக் கொள்ளலாம் என்று இந்த அரசாங்கம் ஏதாவது பரிந்துரை செய்திருக்கிறதா ? இல்லாவிட்டால் அப்படிப் பரிந்துரை செய்யப் பரிசீலனை செய்யுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த அரசாங்கம் ஒன்றும் பரிந்துரை செய்யவில்லை. ஆங்கிலத்தோடு இந்தி இருப்பது என்றால் பயிற்சி மொழியாக, பிராந்திய மொழிகளும் இருக்க வேண்டும் என்ற யோசனை கூறப்பட்டிருக்கிறது. அதையும் மத்திய அரசாங்கம் பரிசீலனை செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** ஐ.ஏ.எஸ். பரீட்சை வைப்பதைக் காட்டிலும் நம் சர்க்கார் உத்தியோகத்தில் இருக்கக்கூடிய நல்ல திறமை வாய்ந்த அதிகாரிகளுக்குச் சர்க்கார் ஐ.ஏ.எஸ். பட்டம் கொடுக்க வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** உத்தியோகத்தில் இருப்பவர்களும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். 25 சத விகிதம் அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

## பீடித்தொழிற்சாலை வளவுகளுக்கு விலக்கு

***284 கேள்வி.—திரு. எம். வி. கரிவேங்கடம் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

தொழில், தொழிலாளர் கூட்டுறவுத் துறையில், 14—7—1964-ல் வெளியான 3554-ஆம் எண் அரசாங்க ஆணையில், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பீடித் தொழிற்சாலை வளவுகளுக்கு அளிக்கப்பட்ட விலக்கு, மற்ற மாவட்டங்களிலும் அதைப்போன்ற நிறுவனங்களுக்கு நீடிக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Requests for exemption will be considered if the employers in the other districts apply for it and agree to the conditions laid down in the G.O. referred to.

## மதிய உணவு வழங்க அதிகப்படி மானியம்

*** 285 கேள்வி.—திரு. பி. முருகையன் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள யூனியன் பள்ளிகளில் மதிய உணவுக்காக தற்போது ஒரு மாணவனுக்கு 6 காசுகள் வழங்கப்படுவதை, 10 காசுகளாக உயர்த்தும் உத்தேசமுண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இல்லை.

**திரு. பி. முருகையன் :** சென்ற ஆண்டு தஞ்சையில் நடந்த பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் மாநாட்டில் ஆறு காசை எட்டு காசாக உயர்த்தித் தர வேண்டுமென்று அமைச்சர் அவர்களிடம் அந்த மாநாட்டு மூலம் தீர்மானம் ஏதாவது கொடுக்கப்பட்டதா? அது பற்றி என்ன ஆலோசனைகள் செய்யப்பட்டன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அம்மாதிரிக் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உள்ளூரில் முயற்சி செய்யாமல், வசூல் செய்யாமல் அரசாங்கம் கொடுக்கிற பணத்தை வைத்துக் கொண்டே மதிய உணவு அளிப்பது என்பது அந்தக் கருத்து. இப்போது நாம் அளிக்கிற 6 பைசா விகிதாசாரத்திலேயே சென்ற ஆண்டு 1 கோடி 68 லட்சம் ரூபாய் அரசாங்கத்திற்குச் செலவாயிற்று. இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 1 கோடி 86 லட்சம் ரூபாய் நாம் இதற்காக ஒதுக்கி வைத்திருக்கிறோம். இதற்கு மேலே செலவு செய்ய முடியாத காரணம் தான் முக்கியமானது. மதிய உணவிற்கு ஆறு பைசாவிற்கு மேல் கொடுக்க முடியாததற்கு அது தான் காரணம்.